# ஏப்ரல் 22

## *புனித அசிசி அக்னேஸ்*

இவள் புனித கிளாரம்மாளின் தங்கை. கன்னியாஸ்திரியாகும்படி இவள் வீட்டை விட்டு ஓடிப்போய், அக்காளுடன் சேர்ந்து கொண்டாள். சாகும் வரை அக்காளுடன் வாழலாம் என இவள் நினைத்தாள். 8 ஆண்டுகளுக்குப்பின் மோந்திசெல்லி என்னும் இடத்தில் இருந்த மடத்துக்கு புனித பிரான்சிஸ் இவளை தலைவியாக்கினார். அப்போது இவளுக்கு வயது 23. அக்னேஸ் மனமுடைந்து வாடினாள். அக்காவையே இவள் எப்போதும் நம்பியிருந்தவள், துயரத்தாலும் விசனத்தாலும் இவள் உள்ளம் நிரம்பியிருந்தது. அக்னேஸ் அடைந்த துயரமானது வாழ்க்கையை மிக கசப்பாக்கப் பார்த்து. என்றாலும் உலக ஆசைகளினின்றும் இப்பூமியின் நண்பர்களினின்றும் அகற்றப்படுவது கடவுளோடு ஆத்துமம் அதிகமாக ஒன்றிக்க ஏதுவாயிருக்கிறது என அக்னேஸ் அறிய வந்தாள். அங்குள்ள கன்னியரை நடத்துவதில் அக்னேஸ் மிக ஆர்வத்துடன் உழைத்தாள். இதனால் அந்த மடத்தில் இருந்த அனேகர் புனிதர்களானார்கள்.

### சிந்தனை:

அக்னேஸ் தன் பிரியம்போல் தன் அக்காளுடன் இருந்திருப்பாளானால் இத்தனை புனிதர்கள் திருச்சபைக்குக் கிடைத்திருக்க மாட்டார்கள்.

### செபம்:

ஆண்டவரே, துறவிகள் அனைவரும் தம் உறவினரை விட உம்மையே அதிகம் நேசிப்பார்களாக.